நேத்திரா லோகத் தைலம



இக் கூந்தல் தைலமானது 100 ஆண்டு காலமாக இலங்கை மக்களால் மாத்திரமின்றி உலக மக்களாலும் பாவிக்கப்படும் அரும் பெரும் தைலமாகும். தலை சம்பந்தப்பட்ட சகல பிணிகளுக்கு நல்ல நிவாரணி!

¼ போத்தல் ரூபா 21-50, ½ போத்தல் ரூ 42-50
தபாற் செலவு ரூபா 9-00 வி பி பி உண்டு.

கலாநிதி டபிள்யூ கே ஜினதாஸ
161, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11.
தொ பே 25095



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6545 1990 மார்ச் 22 வியாழக்கிழமை * * * தினபதி



கஸ்தூரி கல்பயோக



100 ஆண்டுகளாக பிரபல்யம் பெற்றது! கல்பயோகய நரம்புத் தளர்ச்சி, உற்ச கமின்மையை நீக்கி சக்தியைத் தர வல்லது. வாதம், சிறுநீர் வியாதிகளையும் குணமாக்கும்! ஒவ்வொரு ஆண், பெண், குழந்தைகள் அனைவருக்கும் ஏற்றது.

விலை 40/- தபாற் செலவு 5/75

கலாநிதி டபிள்யூ கே ஜினதாஸ
161, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11
தொ பே 25095


சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை போல்

# அரச ஊழியர்களுக்கு தமிழ் தேர்ச்சி பரீட்சை

# அரசு நடத்தும்

## பொது நிர்வாக அமைச்சர் விஜேதுங்கோன் தினபதிக்கு தகவல்

— மு...மத ஐயூப் —

கொழும்பு மார்ச், 21

**அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையைப் போல் தமிழ் தேர்ச்சிப் பரீட்சை ஒன்றையும் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய் து வருகிறது.**

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு யூ பி விஜேகோன் தினைத் தினபதிக்குத் தெரிவித்தார்-

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் சிங்களத்துடன் தமிழும அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது-

அதை அடுத்து 16 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம தமிழை அரச கரும மொழியாக நடை முறைப்படுத்துவதற்கு வேண்டிய சட்டப் பிரமாணங்களைக் கொண்டு வர வழி வகுக்கப்பட்டிருக்கிறது-


இந்தச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு முன்னர் சகல அரசாங்க ஊழியர்களும சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும என விதிக்கப்பட்டு இருந்தது.

அரசமைப்பு மேற்கண்டவாறு திருத்தப்பட்ட பின்னர் அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதற்கு பதிலாக சிங்களம அல்லது தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும என்று அரசு விதித்தது-

இதற்காக நிறுவனக் கோவை அண்மையில் திருத்தப்பட்டது-

இதன் பிரகாரம சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையைப் போலவே தமிழ் தேர்ச்சிப் பரீட்





# யாழ்ப்பாணத்தில் எரிபொருள் பாவனை வெகுவாக அதிகரிப்பு

கொழும்பு மார்ச் 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில மாதங்களில் எரிபொருள் பாவனை வெகுவாக அதிகரித்திருக்கிறது-

கடந்த மாதத்தில் மட்டும யாழ் மாவட்டத்தில் 40 லட்சம லீட்டர் பெற்றோலும 42 லட்சம லீட்டர் டீசலும 65 லட்சம லீட்டர் மண்ணெண்ணெய்யும விற்பனை செய்யப்பட்டிருப்பதாக பெற்றோலியம கூட்டுத்தாபன அறிக்கைகளிலிருந்து தெரிய வருகிறது-

பெற்றோலியம கூட்டுத்தாபன யாழ்ப்பாண எண்ணெய் குதாமில் வேண்டியளவு பெற்றோல் - டீசல் - மண்ணெண்ணெய் ஆகியவை கையிருப்பில் உள்ளன- அவை கட்டுப்பாட்டு விலைக்கே விற்பனை செய்யப்

(2 ஆம பக்கம பார்க்க)

# சைதான களனி பல்கலை மாணவர் 11 பேரும் விடுதலை

கொழும்பு, மார்ச் 21

பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்த களனி பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேரும நேற்று முன்தினம விடுதலை செய்யப்பட்டனர்-

இந்த மாணவர்கள் அதிகாரமின்றி விடுதிகுள்ல் பிரவேசித்து அங்கே தங்கியிருந்தார்கள் என்றே பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த வார இறுதியில் கைது செய்யப்பட்டனர்-

இதேவேளை பேராதனை பல்கலைக்கழக விடுதியிலிருந்து கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவர் நேற்றுக் காலை வரை விடுதலை செய்யப்படவில்லை-

[உ—வ],

# மட்டக்களப்பு கல்வி ஊழியர்கள்

# இந்தியப் படையின் இடத்தில் இலங்கை பொலீஸ்

# புலிகளுடன் மோதுவதற்கு இலங்கை அரசு துணியாது

# மட்டக்களப்பு கல்வி ஊழியர்கள் வெளிநடப்பு

மட்டக்களப்பு மார்ச் 20

மட்டக்களப்பு கல்வித் திணைக்கள ஊழியர்கள் நேற்றுக்காலை வெளிநடப்புச் செய்தனர்.

ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப் படாததை ஆட்சேபித்தே அவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

பொது நிர்வாக அமைச்சின் 89,49 இலக்க சுற்றறிக்கையின் படி 5ம் தர ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும்.

இந்த ஊக்குவிப்பு அலவன்ஸ் ஏனைய திணைக்கள ஊழியர்களுக்கு 4 மாதங்களுக்கு முன்னரே வழங்கப்பட்டு விட்டதாக வெளிநடப்புச் செய்த கல்வித் திணைக்கள ஊழியர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு தபால் திணைக்களம், தொழில் மன்று ஆகியவற்றின் ஊழியர்களுக்கும் இந்த அலவன்ஸ் இதுவரை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

நேற்று சுமார் 300 கல்வித் திணைக்கள ஊழியர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

அனைவரையும் கடமைக்குத் திரும்பும்படி மட்டக்களப்பு பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. கே சோமசுந்தரம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

கூடிய விரைவில் இந்த அலவன்ஸைப் பெற்றுத் தருவதாக அவர் உறுதி அளித்திருக்கிறார். (உ-நு-த)

என்று அரசு விதித்தது.

இதற்காக நிறுவனக் கோவை அண்மையில் திருத்தப்பட்டது.

இதன் பிரகாரம் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையைப் போலவே தமிழ் தேர்ச்சிப் பரீட்சையையும் நடத்துவதென அரசு தீர்மானித்துள்ளது.

இதற்குத் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் அனேகமாக இந்த வருடத்திற்குள் பரீட்சையை நடத்த முடியும் எனத் தாம் நம்புவதாகவும் அமைச்சர் திரு விஜேகோன் தெரிவித்தார். (உ—ற)

## இந்தியப் படையின் இடத்தில் இலங்கை பொலீஸ்

திருகோணமலையில் இருந்து இந்திய அமைதிப் படையினர் விலகிச் செல்வதை முதல் படத்தில் அங்கே பாதுகாப்புக் கடமையில் ஈடுபட இலங்கைப் பொலிஸார் தயாராவதைக் கீழ்ப் படத்திலும் காணலாம். [உ]

# புலிகளுடன் மோதுவதற்கு இலங்கை அரசு துணியாது

## யாழ்ப்பாணத்தில் அன்டன் பாலசிங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே மீண்டும் மோதல் ஏற்படுமா என்று பலரும் கேட்கிறார்கள்.

எமது இன்றைய பலமும் எமக்கு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் ஆதரவும் அரசுக்குத் தெரியும். அதனால் அரசு எம்முடன் மோதத் துணியாது என்றே நம்புகிறோம்.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம் கூறினார்.

நேற்று முன்தினம் புலிகளின் பிரதேசச் செயலகம் கோண்டாவிலில் திறந்து வைக்கப்பட்ட போது டாக்டர் அன்டன் பாலசிங்கம் பேசினார்.

புலிகள் எப்பொழுதுமே ஆயுதங்களைக் கையளிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. சட்டரீதியாக அமைக்கப்படவிருக்கும் வடக்கு கிழக்கு பொலீஸ் படையில் புலிகள் சேர்ந்து கொண்டு சட்டபூர்வமாகவே ஆயுதங்களை வைத்திருப்பார்கள்.

தங்கள் தாயகத்தைப் பாதுகாப்பார்கள். தாயகப் பாது

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது டெலோ புகார்

கொழும்பு மார்ச் 21

திருகோணமலை சிவன் கோயில் வீதியில் வைக்கப்பட்டிருந்த வெலிக்கடைத் தியாகிகளின் "கட் அவுட்"களையும் படுகொலை செய்யப்பட்ட சிலரின் நிழலோவியங்களையும் புலிகள் சிதைத்து விட்டனர் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டி டெலோ இயக்கத்தின் சார்பில் மேற்படி இயக்கத் தலைமைக் குழு உறுப்பினர் திரு க சிவாஜிலிங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (உ)

# தேடுதல் நடத்திக் கைது செய்யும் அவசரகால சட்ட விதி நீக்கப்படும்

கொழும்பு மார்ச் 21

அவசரகால சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள தேடுதல் நடத்தி சந்தேக நபர்களைக் கைது செய்யும் அதிகாரம் நீக்கப்படவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலைமையில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதை அடுத்தே படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த அதிகாரம் உட்பட மேலும் பல அவசரகால சட்ட விதிகளை அரசாங்கம் நீக்கி விடத் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் மேலும் எந்தெந்த அவசரகால சட்ட விதிகளை நீக்கவுள்ளது என்ற விபரம் இவ்வாரத்துக்குள் வெளியிடப்படும் என்று தெரிகிறது.

அவசரகாலச் சட்டத்தின் ஆறு விதிகளை ஏற்கனவே அரசாங்கம் நீக்கியது. விசாரணை நடத்தாமல் சடலங்களை புதைக்கும் அல்லது தகனம் செய்யும் அதிகாரமும் இதனுள் அடங்கும்.

அவசரகால சட்ட விதிகள் சில நீக்கப்படும் என ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டில் அறிவித்திருந்தார்.

அவசரகால சட்டத்தைக் கூடிய விரைவில் முற்றாக நீக்கி விட வேண்டும் என்ற இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் கோரிக்கையையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ—032)

## சோமண்ணை



அப்ப பின்னை வீட்டிலை அடைஞ்சு கிடந்தவை எல்லாம் இப்ப வெளிக்கிட்டு வாகனங்களிலை வலம் வருகினம் எண்டு சொல்லுங்கோவன்.

## எயிட்ஸ் கர்ப்பிணி: குழந்தை பிரசவம் தாமதமாகுமாம்

கொழும்பு, மார்ச் 21

எயிட்ஸ் நோய் தொற்றியுள்ள கர்ப்பிணியின் குழந்தை பிரசவம் தாமதமாகி வருவதால் அவரை ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற்ற டாக்டர்கள் எண்ணியுள்ளனர்.

எனினும் இது குறித்து இன்னும் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை.

தனியான ஒரு அறையில் வைக்கப்பட்டுள்ள இவர் தற்போது

(2 ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிய சுதந்திர பிரகடனம்: மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

வின்ட்றொக் மார்ச் 21

உலகத் தலைவர்கள் பலர் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவிக்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று ஆடிப்பாடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய நம்பிய சுதந்திர விழா செவ்வாய் இரவு கோலாகலமாக நடைபெற்றது.

சுதந்திரப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. தென்னாபிரிக்க கொடி இறக்கப்பட்டு நமீபியக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# எந்த போராளி குழுவுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை

## சட்டப் பேரவையில் கருணாநிதி

சென்னை மார்ச் 21

எந்தவொரு இலங்கைத் தமிழ் போராளிக் குழுவும் தமிழ் நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டாது.

தமிழக முதலமைச்சர் திரு மு கருணாநிதி இவ்வாறு கூறினார்.

நேற்றுக்காலை தமிழ்நாடு சட்டப் பேரவை கூடியபோது எதிர்க்கட்சித் தலைவர் திரு எஸ் ஆர் ராதா பிரேரணை ஒன்று கொண்டுவர முனைந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறி

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# ஆயுள்வேத அதிகாரிகள் மூலம்

# சுகாதார நிர்வாக பணி

கொழும்பு, மார்ச் 21

பொதுச் சுகாதார நடவடிக்கைகளிலும சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆயுள் வேத வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

சுகாதார அமைச்சு இவ்வாறு தீர்மானித்து உள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு நிர்வாகத்தில் இதுவரை டாக்டர்கள் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டனர்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் சுகாதார அமைச்சு இம்முடிவை எடுத்திருக்கிறது.

சுகாதார நடவடிக்கைகளை முன்னேற்றி, சுகாதாரப் பாதுகாப்பு சபைகள் மூலம மக்களுக்கு கூடுதலான நன்மைகளை வழங்குவதற்காக இந்த முறை நடைமுறைக்கு கொண்டுவரப்படுகிறது.

மருத்துவ சாலைகளின் நிர்கம. தடுப்பூசி ஏற்றுதல், இலைக்கஞ்சி விநியோக மருந்து மூலிகை பயிரிடல் போன்ற நடவடிக்கைகள் இவ் ஆயுள் வேத வைத்திய அதிகாரிகளின் பொறுப்பில் விடப்படும.

(இ-007)

## எந்த போரா...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

னார்.

ஒரிஸ்ஸாவில் தஞ்சம அடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அங்கு பெரும தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர்.

இதனால் இந்த அகதிகளை தமிழ் நாட்டுககு அழைத்து வர வடிக்கை எடுக்கப்படுமா என திரு எஸ் ஆர் ராதா கேள்வி எழுப்பினார்.

இலங்கையிலுள்ள ஒரு போராளிக் குழுவை வர அனுமதித்தால் மற்றைய குழுக்களும வர முயலும.

அவை வந்தால் தமிழகத்தில் சட்டத்தையும ஒழுங்கையும் நிலை நாட்டுவதில் பெரும பிரச்சினைகள் ஏற்படும.

இதனால் எந்தவொரு இலங்கைத் தமிழ் போராளிக் குழுவும தமிழகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டா[illegible] முதலமைச்சர் திரு க[illegible]நிதி கூறினார்.

இதேவேளை ஒரிஸ்ஸாவில் தஞ்சமடைந்துள்ள தமிழ் அகதிகள் இலங்கையில் நிலைமை சீரடைந்ததும அங்கே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என ஒரிஸ்ஸா முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இலங்கைத் தமிழ் அகதிகள் ஒரிஸ்ஸா மாநில முகாமகளில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும அகதிகள் விடயத்தை அரசியல் பிரச்சினையாக்கிவிட வேண்டாம என்றும முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

...ஜய ண்ஜுமி ‡;தின்ளதஆாலனி

(உ-ர)



அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தூதக் குழு, அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்னவுடன் உரையாடிக் கொடிருப்பதை படத்தில் காணலாம.

(இ-ங)

### இராமேஸ்வரம் — தலைமன்னார்

# கப்பல் சேவையை ஆரம்பிக்க இந்தியாவுடன் பேசப்படும்

## தெலுங்கு காங்கிரஸ் குழுவிடம் ரஞ்சன்

கொழும்பு, மார்ச் 21

இராமேஸ்வரம, தலைமன்னார் கபபல் சேவையை மீண்டும ஆரமபிக்க இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும.

இது தொடர்பாக மார்ச் 31 ஆம திகதிக்குப் பின்னர் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும வெளிவிவகார அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று அமைச்சரின் அழைப்பின் பேரில் அவரது அமைச்சில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

இத்தூதுக் குழுவில் தெலுங்கு காங்கிரஸ் தலைவர் திரு எம அன்பழகன், துணைத் தலைவர் திரு. டி மகேந்திரன், செயலாளர் ஜே எஸ் பெர்னாண்டோ, பொருளாளர் திரு கே சிவலிங்கம ஆகியோர் அங்கம வகித்தனர்.

பொலீஸ், மற்றும முப்படைகளிலும இன விகிதாசார அடிப்படையில் தெலுங்கு இளைஞர் யுவதிகளும சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளிலும, அரசின் மூலம இவர்களுக்கு முக்கியத்துவம அளிக்கப்படும என்றும அவர் கூறினார்.

அகில இலங்கை ரீதியாக வாழ்ந்து வரும தெலுங்கு மக்க

இது தொடர்பாக தமது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுப்பதாகவும அமைச்சர் தெரிவித்தார்.

(இ-ங)

## யாழ்ப்பாணம்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பட்டு வருகின்றன என்றும கூட்டுத்தாபனம தெரிவித்திருக்கிறது

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் விலைகள் வருமாறு—

ஒரு லீட்டர் பெற்றோல் – 20 ரூபா 50 சதம—

ஒரு லீட்டர் டீசல் – 10 ரூபா 08 சதம—

ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் – 7 ரூபா 06 சதம—

(ய—வ)

## நமீபிய சுதந்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கொடி ஏற்றப்பட்டது—

அதைத் தொடர்ந்து நேற்று புதன்கிழமை 72 பேர் கொண்ட அமைச்சரவை உருவாக்கப்பட்டது—

அமைச்சர்களில் இருவர் மட்டுமே வெள்ளையர்கள்— மற்றவர்கள் எல்லோரும கறுப்பு இனத்தவர்கள்—

சுதந்திர விழா பற்றி மேலும விவரம 5 ஆம பக்கத்தில்—

(ய—எ)

## இஸ்ரவேல் நலன் காக்கும்

### பிரிவை மூடுவதற்கு வரவேற்பு

கொழும்பு, மார்ச் 21

இலங்கையிலுள்ள இஸ்ரவேல் நலன் காக்கும பிரிவை மூடிவிடுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டமை தெரிந்ததே. இதற்கு பேருவளை ஜாமிஅ நளீமிய்யா கலாபீடத்தின் ஆயுட்கால தலைவரும இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவருமான அல்ஹாஜ் எம ஐ எம நளீம ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அல்ஹாஜ் எம ஐ எம நளீம ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும குறிப்பிட்டிருப்பதாவது:

இலங்கையிலுள்ள இஸ்ரவேல் நலன் காக்கும பிரிவை மூடிவிடுவதற்கு ஜனாதிபதி எடுத்த துணிச்சலான முடிவை நான் வரவேற்கிறேன். மனதார பாராட்டுகின்றேன்.

இலங்கைக்கும அரபுலகத்திற்கும இடையில் இருந்து வரும நட்புறவை வழிவகுக்கும என்பது எனது ஆழமான நமபிக்கையாகும.

இப்படி நளீம ஹாஜியார் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

(இ-வ)

### இல்யாஸ்

ஜனாதிபதி எடுத்த இந்த முடிவுக்கு வடமேல் மாகாண சபை உறுப்பினர் டாக்டர் ஐ எம இல்யாஸும நன்றி தெரிவித்து தந்தி ஒன்றை அனுப்பி உள்ளார்.

பலஸ்தீன மக்களின் உரிமைகளை அங்கீகரித்து, அதற்கு ஆதரவு தெரிவிக்கும விதத்தில் "அல்-அக்ஸா" ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிடுமபடியும, ஜனாதிபதியிடம டாக்டர் இல்யாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(இ-மு)

### பிரெஞ்சு நிறுவனம் மீது தொடரப்பட்ட

## உடன்படிக்கை மீறல் வழக்கு:

## எயர்லங்காவுக்கு வெற்றி

கொழும்பு மார்ச் 21

உடன்படிக்கை மீறல் என்ற குற்றச் சாட்டின் பேரில் எயர்லங்கா நிறுவனம பிரெஞ்சு உல்லாசப் பயண நிறுவனமொன்றின் மீது வழக்குத் தாக்கல் செய்தது. இவ் வழக்கில் எயர் லங்காவுக்கு சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த பிரெஞ்சு நீதிமன்றம ஒரு கோடியே 6 லட்சத்து 42 ஆயிரம ரூபாவை எயர்லங்கா நிறுவனத்துக்கு நஷ்ட ஈடாக வழங்குமாறு அப்பிரெஞ்சு நிறுவனத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டமபர் அக்டோபர் மாதஙகளில் கொழுமபுக்கும பாரிஸுக்கும இடையே மூன்று விமான சேவைகளை நடத்தும பொருட்டு எயர்லங்கா நிறுவனம சொட்டாயர் என்ற பிரெஞ்சு நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டது.

இதன் கீழ் விமான சேவைக் காக மமாததத் தொகையில் ஐமபது சதவீதமும எயர்லங்கா விடம அந்நிறுவனம வழங்கியது.

ஆனால் இலங்கையில் உள்நாட்டு யுத்தம ஒன்று நடைபெறுவதாகக் காரணம காட்டிய மேற்படி நிறுவனம இந்த உடன்படிக்கையைத் தன்னிச்சையாக செயலழக்கச் செய்ததோடு மீதிப பணத்தை வழங்கவும மறுத்து விட்டது.

ஏற்கனவே கொடுக்கப்பட்ட ஐமபது சதவீதமான தொகை தமக்குத் திருப்பி வழங்க வேண்டுமெனவும எயர்லங்காவிடம இந்நிறுவனம கோரிக்கை விடுத்தது.

இதைத் தொடர்ந்து மேற்படி நிறுவனத்துக்கு எதிராக எயர் லங்கா நிறுவனம மற்றொரு பிரெஞ்சு நிறுவனத்துடன் இணைந்து பிரெஞ்சு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

இவ்வழக்கு விசாரணையின் போது இலங்கையில் யுத்த நிலை காணப்படவில்லை என்ற எயர் லங்காவின் வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. எனவே நீதிமன்றம மேற்படி தொகையை நஷ்டஈடாக வழங்குமாறு தீர்ப்பளித்தது.

(இ-032)

# நிதி நிறுவனங்கள் அரசியல்தலையீடு இன்றி இயங்க வேண்டும்

கொழும்பு, மார்ச் 21

— நவரத்தினம்

நிதி நிறுவனங்கள் அரசியல் தலையீடு இன்றி இயங்க வேண்டும—

எந்தவொரு நிதி நிறுவனமும இந்த நாட்டிற்கு விசுவாசமாக இயஙகவில்லை—

[illegible]த்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும பேசியதாவது—

இந்த சட்டவரைவை நான்

## நமது புதிய

## ஜனாதிபதிக்கு

## இலங்கையில் இருதய

## இன்றைய திரைகளில்

8 வது வாரம

கெப்பிட்டல்

(கொழும்பு)

2-30 6-00, 9-30

லிடோ

(யாழ்நகர்)

போதைக்கு பிரசவம் ஏற்படும் அறிகுறி இல்லை என டாக்டர்கள் தெரிவித்தனர்- [உ—ர]

தெலுங்கு காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று அமைச்சரின் அழைப்பின் பேரில் அவரது அமைச்சில் சந்

## இலங்கையில் இருதய "பை பாஸ்" சத்திர சிகிச்சை

கொழும்பு மார்ச் 21

இலங்கையில் முதன் முதலாக இருதய "பைபாஸ்" சத்திர சிகிச்சை ஒருவருட நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படும்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பெரியாஸ்பத்திரியில் இச்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இதற்காக ஒரு விசேட பிரிவு இந்தப் பெரியாஸ்பத்திரியில் அமைக்கப்படும்.

இதற்கு இரண்டு கோடி ரூபா செலவிடப்படும்.

இதனை ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் டாக்டர் நவீன் ரொட்ரிகோ தெரிவித்தார்.

இச்சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக வருடாந்தம் 100 நோயாளர்கள் வரை அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்கிறார்கள்.

இதற்குப் பெருந்தொகைப் பணமும் செலவாகிறது.

இவ்வாறு இந்த இருதய சத்திரசிகிச்சைக்குச் செல்வோருக்கு ஆகக் குறைந்தது 3 லட்ச ரூபா வரை செலவாவதாகக் கணக்கிடப்பட்டு உள்ளது.

இலங்கையில் இச்சத்திர சிகிச்சைப் பிரிவை ஆரம்பிப்பதற்காக அமெரிக்க டாக்டர்களையும் தாதிமார்களையும் அழைத்துக் கொண்டு டாக்டர் டோனொன மைக்கல் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

(இ-007)

## யாழ். ஆஸ்பத்திரியில் குழந்தை இறந்ததும் தாய் தலைமறைவு

கொழும்பு மார்ச் 21

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தனது குழந்தைக்கு சிகிச்சை பெற வந்த தாய் ஒருத்தி குழந்தை இறந்த விட்டதும் தலைமறைவாகி விட்டார்-

தனலட்சுமி என்ற 4 மாத குழந்தை வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது-

இந்தக் குழந்தை யாழ் பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது-

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட மறுதினமே குழந்தை இறந்து விட்டது-

உடனே குழந்தையின் கட்டில் அருகே இருந்த தாய் தலைமறைவாகி விட்டார்-

இப்படி யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியின் பொலீஸ் பிரிவு தெரிவித்தது-

மேற்படி தாயார் குறிப்பிட்ட முகவரிக்கு குழந்தை இறந்த செய்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது-

குழந்தையின் சடலம் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது- (இ-வ)

படும்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளிலும், அரசின் மூலம் இவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அகில இலங்கை ரீதியாக வாழ்ந்து வரும் தெலுங்கு மக்களின் பாதுகாப்புக்கும் அமைச்சர் உத்தரவாதம் அளித்தார்.

மேலும் கொழும்பு செட்டியார் தெரு, ஐந்துலாம்பு சந்தி, கொச்சிக்கடை, ஆட்டுப்பட்டித் தெரு போன்ற பகுதிகளில் இரவு வேளையில் இடம்பெற்று வரும் வழிப்பறி கொள்ளைகள் பற்றி தூதுக் குழுவினர் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினர்.

## புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு புலிகளின் பொறுப்பு என்பதை அரசாங்கமே உணர்ந்து விட்டது என்றும் டாக்டர் பாலசிங்கம் கூறினார்-

அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள் பற்றியும் டாக்டர் பாலசிங்கம் தமது உரையில் குறிப்பிட்டார்-

எமது மக்களின் பிரச்சினைகளை அரசுக்கு எடுத்து விளக்கியிருக்கிறோம்- எமது மக்களின் அபிலாஷைகளையும் அரசுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம்-

இவற்றை எல்லாம் அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது- பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக அரசு பேச்சு வார்த்தைகளின் போது உறுதி அளித்துள்ளது-

உறுதி மீறப்படுமானால் நாடு பிளவுபடும்- இது அரசுக்கு நன்றாகத் தெரியும் என்றார் டாக்டர் அன்டன் பாலசிங்கம்-

புலிகள் இயக்கப் பிரதித் தலைவரும் புலிகளின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவருமான மகேந்திரராஜா மாத்தயா புலிகளின் பிரதேச செயலகத்தைத் திறந்து வைத்துப் பேசினார்-

அவர் கூறியதாவது—

17 வருட வெற்றிப் போராட்ட வரலாறு எம்முடையது- நாம் இப்போது பதவிக்காக அரசியலுக்கு வரவில்லை- எமது மக்களின் அரசியல், சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக உழைக்கவும் அவர்களின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் மேலும் உறுதிப்படுத்தவுமே அரசியலுக்கு வந்திருக்கிறோம்- இதில் மக்கள் எம்மோடு சேர்ந்து தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும்-

இப்படி அவர் கூறினார்-

செயலகத் திறப்பு விழாவுக்கு புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஸ்டான்லி டொமினிக் தலைமை தாங்கினார்-

தியாகி திலீபனின் தந்தையார் நாகலிங்கம் இராணுவ செயலகத்தின் உட்பிரிவுகள் பலவற்றைத் திறந்து வைத்தார்-

தியாகி மில்லரின் தாயார் திருமதி கமலாதேவி வல்லிபுரம் செயலகத்தில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுத்தூபியை திரை நீக்கம் செய்து வைத்தார்-

விழாவில் புலிகளின் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் பானு, திருமதி அடேல் பாலசிங்கம் முதலானோரும் பெரும் எண்ணிக்கையில் பொது மக்களும் கலந்து கொண்டனர்- [உ]

கொழும்பு, மார்ச் 21

நிதி நிறுவனங்கள் அரசியல் தலையீடு இன்றி இயங்க வேண்டும்-

எந்தவொரு நிதி நிறுவனமும் இந்த நாட்டிற்கு விசுவாசமாக இயங்கவில்லை-

இதனை சீராக்க இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவீர்களானால் அரசின் இத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்-

த வி கூட்டணி எம் பி திரு கே நவரத்தினம் இப்படி நாடாளுமன்றத்தில் பேசினார்-

இலங்கை கடன் தகவல் பணியகம் சட்டவரைவு மீதான விவா

### — நவரத்தினம்

தத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் பேசியதாவது—

இந்த சட்டவரைவை நான் எதிர்க்கவில்லை-

உற்பத்தியில் சில பேர் சரியாக ஈடுபடாமல் நட்டமடைந்து விட்டோம் என்று கூறிக் கொண்டு கடன்களை திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறார்கள்-

இவர்கள் சாதாரண மக்கள் அல்லர்- அரசியல் செல்வாக்குப் பெற்ற பண முதலைகள்-

இவற்றை எல்லாம் இந்த அரசாங்கம் தெரிந்து இருந்தும் காணாமல் செயல்பட்டது பெரிய தவறு-

காலம் பிந்தித்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட இருக்கிறது- எப்படியிருந்தாலும் சரியான முறையில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்- அரசியல் காரணங்களுக்காக இது மேலும் பிந்தி விடக் கூடாது-

இப்படி நவரத்தினம் பேசினார்-

[இ—கு]

மீதிப் பணத்தை வழங்கவும் மறுத்து விட்டது.

## நமீபியாவின் புதிய ஜனாதிபதிக்கு ஜனாதிபதி பிரேமதாசா வாழ்த்து செய்தி

கொழும்பு மார்ச் 21

குடியரசாக மலர்ந்துள்ள நமீபியாவின் புதிய ஜனாதிபதியாக சாம் நுஜாமா பதவியேற்றிருப்பதைப் பாராட்டி ஜனாதிபதி பிரேமதாச அவருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார், அதில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

உங்களது ஞானம், துணிச்சல், மற்றும் உறுதியான தலைமைத்துவம் ஆகியவற்றைக் கௌரவிக்கும் வகையிலேயே இப்பதவி தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நமீபிய மக்களின் சட்டபூர்வமான சுதந்திரப் போராட்டத்துக்கு இலங்கை தொடர்ந்து ஆதரவு வழங்கி வந்துள்ளது என்பதையும் ஜனாதிபதி இதில் குறிப்பிட்டிருக்கிறார். (இ-032)

## 12 கொலைகள் தொடர்பாக மேலும் 2 பொலீஸார் கைது

கொழும்பு மார்ச் 21

நிட்டம்புவை, வவுல்கெலே தோட்டத்தில் இடம்பெற்ற 12 பேரின் படுகொலை சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் மேலும் இரு பொலீஸ் அதிகாரிகளை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இதன்படி இக்கொலைச் சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்ட சரணடைந்த பொலீஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 13 ஆகும், இதனை இரகசியப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விசாரணைகளின் மூலம் மேலும் பல பொலீஸ் அதிகாரிகளின் பெயர்களும் கிடைத்துள்ளன என்றும் இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்-

கம்பஹா பகுதியில் சட்டவிரோதமாக சாராயத்தை விற்பனை செய்து வந்ததாகக் கூறப்படும் நபர் ஒருவரும் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது, இந்த விடயம் குறித்தும் விசாரணை நடத்தப்படுகிறது.

(இ-வ)

8 வது வாரம்
கெப்பிட்டல் (கொழும்பு)
2-30 6-00, 9-30
லிடோ (யாழ்நகர்)
10-30, 2-00 6-00
பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த
பூ... பூவா பூத்திருக்கு
(கலர்)

14 வது வாரம்
ராஜா (யாழ்நகர்)
10-30, 2-30 6-00
செல்லமஹால் (கொழும்பு)
2-30 6-00, 9-30
மிட்லண்ட் (நாவலப்பிட்டிய)
2-00, 6-00
ரஜனிகாந்த் (இரட்டை வேடம்)
ராதா நதியா நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

இன்று 100 வது நாள்
ஜெஸிமா (கிராண்ட்பாஸ்)
2-30 6-00 9-30
வெலிங்டன் (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
கார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி நடித்த
வருஷம் 16
(கலர்)

# கதாநாயகி சான்ஸுக்கு காத்திருக்கும் கன்னி

## நடிகை நிர்மலாவின் மகள் பிருந்தா

ராமநாராயணன் இயக்கத்தில் உருவாகிய "ஆடி வெள்ளி" என்ற படத்தில் இளமையோடு அழகு இணைந்து விளையாடும் ஒரு புது நடிகை நடித்திருக்கிறார்

இந்த நடிகை தமிழ்ச் சொற்களை தெள்ளத் தெளிவாக பேசி நடித்திருப்பது புதுமையாகவே இருக்கிறது—

ஏனென்றால் இப்போதெல்லாம் புதுமுகங்கள் என்றாலே "டப்பிங்" குரலுக்கு ஏற்ப வாய் அசைக்கும் முகங்களே!

இந்த நிலையில் இப்படி பேசி நடித்த நடிகை யார்? என்ற கேள்வியை எழுப்ப, மனோகர் நாடகக் குழு நடிகையான நிர்மலாவின் மகள் என்று அறியக் கிடைத்தது— உடனடியாக அவரைச் சந்தித்து உரையாடும் போது அறியக் கிடைத்த தகவல்கள் இதோ—

இவள் பெயர் பிருந்தா! என்று கூறவும் பிருந்தா உடனே பேச்சை தொடர்ந்தார்—

எனது அம்மாவின் கனவை நனவாக்க வந்தவள் நான் என்று



பிருந்தா

சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்—

என் அம்மா நிர்மலா பல படங்களில் சிறு வேடங்களில் நடித்தவர்—

ஆனால் அவர்களின் நடிப்புக்கு பெருமேற்றி பெயர் தேடித் தந்தது மதிப்பிற்குரிய ஆர் எஸ் மனோகர் அவர்களின் நாடகங்கள் தான் அவர்களுக்கு இணையாக நின்று வசனம் பேசி நடிப்பது சுலபமானது அல்ல—

அதை 15 ஆண்டுகளாக செய்து காட்டி நாடக ரசிகர்களின் அன்பை பெற்றார்— எனது அம்மா—

நானோ "பிளஸ் 2" படித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலேயே சினிமா நடிகை ஆகி இருக்கிறேன்—

சென்னையில் பிறந்து வளர்ந்த தமிழ்ப் பெண் ஆனாலும் முதலில் "சங்கம லகரி" என்ற மலையாளப் படத்தில் நடித்தேன்—

எங்கள் குடும்ப நண்பர் ஒருவர் டைரக்டர் மணிவண்ணன் அவர்களிடம் அறிமுகம் செய்ய விவேகானந்தா பிக்சர்ஸ் சார்பாக திருப்பூர் மணி அவர்கள் தயாரிக்கும் படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது—

எனது தாய்மொழியான தமிழ்ப் படங்களில் கதாநாயகியாக நடிக்கும் நேரம் நிச்சயம் வரும்


எனது வயது 17— அங்கிலமும் சரளமாக பேசுவேன்— நடனப் பயிற்சியும் பெற்றிருக்கிறேன்— எனது தாத்தா முருகேசு முதலியார் நாடகங்கள் எழுதி நடித்து டைரக்ட் செய்தவர்—

கலையோடு இணைந்து வாழும் என் குடும்பத்துக்கு பெயர் தேடிக் கொடுப்பேன்—

இவ்வாறு பிருந்தா கூறினார்—

இவருடன் உரையாடும் போது இவர் கதாநாயகி "சான்ஸ்" மீது குறி வைத்து காத்திருக்கிறார் என்பதை நன்றாக அறிய முடிந்தது—

(இ—10)



மனைவியிடம் மலர் கொடுத்தால் "தலையில் சூடி விடுங்கள்" என்பாள்— மணமாகாமல் மணம் வீசும் மங்கை (காதலி) யிடம் மலர் கொடுத்தால் அதனை முகர்ந்து பார்த்து மகரந்தச் சேர்க்கையை எண்ணித் துடிப்பாள்

மலராய் மலரும் ஜெயமாலினிக்கு பூச்செண்டு கொடுத்து மனதின் ஆழத்தை அறிய முயன்றால் அவளுக்கு கோபம் வராதா என்ன?

[வெண்ணிற ஆடை மூர்த்தி — ஜெயமாலினி]
[படம்— சேலம் விஷ்ணு] (இ—10)

## "உயிரே உன்னைத் தேடி"

பல கன்னடப் படங்களை தயாரித்து டைரக்ட் செய்தவர் சுப்புராஜ்—

இவர் கதை திரைக்கதை அமைத்த டைரக்ட் செய்ய கலைச் செல்வி ஆர்ட் பிலிம்ஸ் "உயிரே உன்னைத்தேடி" என்ற பெயரில் படம் தயாரிக்கிறது—

சங்கர் — கணேஷ் இசை அமைக்கும் இந்தப் படப்பிடிப்பு பெங்களூரில் நடைபெறுகிறது—

## சேலடி கண்மணியில்

# மத்திய மாகாணத்தில் காணி பகிர்வு வேலை திட்டங்கள் நிறுத்தம்

கண்டி மார்ச் 20

மத்திய மாகாணத்தில் காணிகளை பகிர்ந்து கொடுப்பது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் அனைத்தும் இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன—

இதனை மத்திய மாகாண முதலமைச்சர் திரு டபிள்யூ பி பீ திசாநாயக்க தெரிவித்தார்—

மத்திய மாகாண சபையின் மாதாந்த தொடர் கூட்டம் அண்மையில் கண்டி குயீன்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது—

அங்கு உரையாற்றும் பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்—

கூட்டம் திரு டி பீ சமரதுங்க தலைமையில் நடைபெற்றது—

அங்கு திசாநாயக்க தொடர்ந்தும் கூறியதாவது—

மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்திலேயே காணிகள் பகிர்வு தொடர்பான பிரச்சினைகள் உருவாகி உள்ளன—

இதனால் காணி பகிர்ந்தளிப்பது தொடர்பாக நாம் மேற்கொண்ட வேலைத் திட்டங்கள் அனைத்தும் இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன—

தோட்டங்களில் வாழும் ஒரு பகுதியினருக்கு அநீதிகள் இழைக்கப்பட்டு உள்ளதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன—

இவர்களின் பிரச்சினைகளையும் நாம் அனுதாபக் கண் கொண்டு நோக்க வேண்டும்—

ஜனவசம தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் காணிப் பங்கீடு தொடர்பாக அதிருப்தி அடைந்துள்ளனர்—

தோட்டத் தொழிலாளர்கள் ஆண்டாண்டு காலமாகத் தாம் வாழ்ந்த இடத்திலேயே வாழ வேண்டுமென விரும்புகின்றனர்—

இந்தச் சலுகை நிச்சயமாக வழங்கப்பட வேண்டும்—

மலையகத்தில் காணிகள் பகிரப்படும் பொழுது நீதியும் நியாயமும் இடம்பெறுதல் அவ

கள் இந்தச் சபை மூலம் வழங்கப்பட்டன— இந்த விண்ணப்பங்கள் காணிப் பகிர்வின் போது பரிசீலனை செய்யப்படுமா என பலரும் கேட்கிறார்கள்—

மத்திய மாகாண சபை காணிகள் பகிர்வு தொடர்பாக மேற்கொண்ட ஒரு அமைப்பு முறையிலான வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்

ஆண்டாண்டு காலமாக அங்கு வசிக்கும் சகல மக்களுக்கும் நியாயமான முறையில் இவை வழங்கப்பட வேண்டும்— இதில் பாரபட்சம் காட்டக் கூடாது என்றார்—

**அண்ணாமலை**

காணிப் பகிர்வு தொடர்பாக பலத்த போட்டிகள் ஏற்பட்டுள்ளன— இவற்றை நியாயமாக ஆராய வேண்டும்— இந்தச் சபை நியமித்த கமிட்டியின் தீர்மானங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் நல்லது எனக் கூறினார்—

**இராமையா**

காணிப் பகிர்வின் போது எந்தத் தலையீடும் இருக்கக் கூடாது— அது நீதியாகவும் நியாயமாகவும் நடைபெற வேண்டும் என்றார்—

**ராஜு**

காணி பெற்று கொள்வதற்கான விண்ணப்பங்களை தமிழ் மொழியிலும் அச்சிட்டு வழங்க வேண்டும் என்றார்— [இ—017]



## இஸ்லாமிய நூல் வெளியீட்டு விழா

இலங்கை ஜமாஅதே இஸ்லாமிய இயக்கம் வெளியிட்ட இஸ்லாமிய நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு கொள்ளுப்பிட்டி ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்றது.

உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப, அமைச்சர் ஜனாப் ஏ சீ எஸ் ஹமீதிடம் இருந்து அல்ஹாஜ் ஏ எச் எல் ஏ சலீம் ஒரு நூலைப் பெறுவதைப் படத்தில் காணலாம்,


ஜமாஅதே இஸ்லாமி தலைவர் மௌலவி, ஏ எல் எம் இபுராஹீம அரசாங்க உதவி கொறடா அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் (எம் பி) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(இ-007)

# மூன்று எம்.பிக்கள் விரைவில் பதவிகளை துறப்பர் —ஜனாதிபதி

## கேளடி கண்மணியில் திருப்பாசுரப் பாடல்

### எஸ். பி யும் — ஜானகியும் பாடினர்



பாலசுப்பிரமணியம

டில்லி காணேஷ் ஆகியோர் நடிக்கும இதன் முதல் கட்டப் படப்பிடிப்பு துவங்கியது- புத இயக்குனர் வசந்த் இயக்கத்தில் படம வளர்கிறது-

(இ-10)

விவேக் சித்ராவின் "கேளடி கண்மணி" தவக்க விழா அன்று ஆண்டாள் திருப்பாசுரப் பாடல், இளையராஜா இசையில் ஒலிப்பதிவானது-

"வாரணமாயிரம சூழவலம செய்து நாரண நமபி நடக்கிறான் என் எதிர் பூரண பொற்குடம வைத்துப் புறமெங்கும தோரணம நாட்டக்கனாக் கண்டேன் தோழி நான்" என்ற அந்தப் பாடலுக்கு எஸ் பி பாலசுப்பிரமணியமம, எஸ் ஜானகியும குரல் கொடுத்தனர்-

எஸ் பி பாலசுப்பிரமணியம, ராதிகாவுடன் ஸ்ரீவித்யா, ஜனகராஜ், பூர்ணம விசுவநாதன்,

...க்கும இந்தப் படப்பிடிப்பு பெங்களூரில் நடைபெறுகிறது-

(இ-10)

## புதுமுகங்களின் "முதல் முத்தம்"

நியூ ராகம சினி கிரியேஷன்ஸ் என்னும நிறுவனம "முதல் முத்தம" என்ற பெயரில் படம தயாரிக்கிறது-

புது நடிகர் ஜீவா கதாநாயகனாக நடிக்க, கதாநாயகியாக நடிக்கிறார், பமபாய் அழகி சாருலதா-

நிழல்கள் ரவி, ஜி சீனிவாசன், செந்தில், அனந்தராஜ், குமரி முத்து, வைஷ்ணவி, லலித குமாரி, சில்க் சுமிதா, குயிலி, விஜயசந்திரிகா மற்றும புதுமுகங்கள் பலர் நடிக்கிறார்கள்-

வாலி. எஸ் ஏ ராஜ்குமார் பாடல்கள் எழுத, டி ரவீந்திரன் ஒளிப்பதிவை கவனிக்க. திரைக் கதை அமைத்து டைரக்ட் செய்கிறார். வசந்த பாபு,

13 ஆண்டு கால திரை உலக அனுபவம பெற்ற வசந்த பாபு பல படஙகளின் துணை டைரக்டராக பணி புரிந்தவர்-

இவர் டைரக்ட் செய்யும முதல் படம, "முதல் முத்தம"

வாலி, எஸ் ராஜ்குமார் எழுதும பாடல்கள் இடமபெறுவதுடன், எஸ் ஏ ராஜ்குமார் இசை அமைக்கிறார்-

ஏ பி எஸ் மணி, ஏ எஸ் ராஜேந்திரன் சேர்ந்து தயாரிக்கும "முதல் முத்தம" படத் தொடக்க விழா ஏ வி எம ஒலிப்பதிவு கூடத்தில் நடந்தது-

அப்போது சைலஜா பாட, எஸ் ஏ ராஜ்குமார் இசையில் "யமுனா... யமுனாடி ஆசைதாடி" என தொடஙகும பாடல் ஒலிப்பதிவானது-

"முதல் முத்தம" படப்பிடிப்பு தொடஙகியது- மைசூர். ஹோக் நீர் வீழ்ச்சி பகுதிகளில் "முதல் முத்தம" படத்தை உருவாக்க திட்டமிட்டு உள்ளனர்-

(இ -10)

...ரப்படும பொழுது நீதியும நியாயமும இடமபெறுதல் அவசியம என்றார்-

புத்திரசிகாமணி

தூணிகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பஙகள்...

## க. பொ. த (சா. த) கருத்தரங்குகள்

கமபளை வட்டாரத்தில் உள்ள பாடசாலைகளின் மாணவர் நலன் கருதி கமபளை சாஹிரா தேசிய கல்லூரியில் க பொ த (சா த) கருத்தரஙகு ஒன்றை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுஙகுகள் மேற்படி கல்லூரியால் செய்யப்பட்டுள்ளன.

சிஙகள மொழி மூலம மாணவர்களுக்கு வெவ்வேறு கருத்தரஙகுகள் நடத்தப்படும. (ஐ-083)

## போஷாக்கின்றி மாடுகள் இறப்பு

கொழுமபு, மார்ச்- 21

நிக்கவெரட்டிய பகுதியில் உள்ள மாடுகளுக்கு போஷாக்கின்மை ஏற்பட்டு உள்ளது- இதனால் மாடுகள் திடீரென மயக்கமுற்று விழுகின்றனவாம- இமமாடுகள் விழுந்து சில தினஙகளின் பின்னர் இறந்து விடுகின்றனவாம!

கடும வரட்சியும பச்சை புல் உடன் கூடிய மாட்டுத் தீனி பற்றாக்குறையுமே இந்நிலைக்கு காரணம என மிருக வைத்திய பிரிவின் அதிகாரி தெரிவித்தார்-

மாட்டுத் தீனி விலை அதிகரித்துள்ளதால் பசு மாடுகளுக்கும, காளை மாடுகளுக்கும தீனி போட மாட்டுச் சொந்தக்காரர்கள் கஷ்டப்படுகின்றனர் எனவும தெரிவிக்கப்படுகிறது-

(இ-007)

## ...பதவிகளைத் துறப்பர் —ஜனாதிபதி

கொழுமபு, மார்ச்- 21

தற்சமயம நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிப்போரில் மூவர் தமது எம பி பதவிக்கு அபகீர்த்தி உண்டுபண்ணும விதத்தில் நடந்துள்ளனர்-

இதனால் அவர்கள் மூவரும விரைவில் தமது எம பி பதவிகளைத் துறப்பர்-

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இப்படிக் கூறினார்-

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் பொது வாழ்வில் 40 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழுமபு கஙகாராம விகாரையில் ஞாயிறன்று மாலை விசேஷ மத வைபவஙகள் நடைபெற்றன-

இந்த வைபவத்தில் ஜனாதிபதி மேலும கூறியதாவது—

எம பிமார் பொது மக்களின் பணத்தால் சமபளம பெறுபவர்கள்- எனவே இவர்கள் பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும-

இதை விடுத்து வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும எம பிமார் தமது பதவிகளை ராஜினாமாச் செய்து விட வேண்டும-

தொழில் வழஙகுவதற்காக எம பிமார் நியமிக்கப்படவில்லை- தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்-

இதனை நான் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் போது எம பிமாருக்கு எடுத்துரைத்தேன்-

மூன்றாம வகுப்பு முதல் சிஙகள மொழியை தாய் மொழியாகக் கொண்டு கல்வி பயிலும சகல மாணவர்களுக்கும தமிழ் ஆஙகிலம ஆகிய மொழிகளை போதிக்க வேண்டும-

அதேபோல் தமிழ் பேசும் மாணவர்களுக்கு சிஙகளம ஆஙகிலம ஆகிய மொழிகளைப் போதிக்க வேண்டும்- இவ்வாறு நான் பணிப்புரை விடுத்துள்ளேன்-

அதற்கேற்ற விதத்திலேயே கல்வித் திட்டம தயாரிக்கப்படும-

இதனால் தேசிய ஒற்றுமை ஏற்படும- அத்தோடு நாட்டில் எந்தவொரு பகுதியிலும எவருக்கும கடமை புரியவும சந்தர்ப்பம கிடைக்கும-

இப்படி ஜனாதிபதி குறிப்பிட்டார்-

(இ—வ)

### புத்தளம் மாவட்ட

## முஸ்லிம்களின் குறை தீர்க்க அஸ்வர் எம்.பியாக நியமனம்

### ஜனாதிபதிக்கு நன்றி கூற பிரேரணை

புத்தளம, மார்ச்- 20

புத்தளம மாவட்ட முஸ்லிம மக்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கும பொருட்டு அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வரை ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினராக நியமனம செய்துள்ளார்-

எனவே ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும-

இவ்வாறு புத்தளம நகர சபையைக் கோரும பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது-

புத்தளம நகர சபை இமமாத இறுதிக்குள் கூட உள்ளது-

இக் கூட்டத்தின் போது இப் பிரேரணை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும-

நகர சபையின் தில்லையடி பகுதி உறுப்பினராக ஜனாப் ஏ எஸ் சலீமகான் இப்பிரேரணைக்கான முன்னறிவித்தலை கொடுத்துள்ளார்-

அப் பிரேரணையில் மேலும கூறப்பட்டுள்ளதாவது—

கடந்த பொதுத் தேர்தலின் போது விருப்பு வாக்கு தெரிவு முறையினால் புத்தளம தொகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாமல் போனதுடன் புத்தளம மாவட்டத்திற்கு ஒரு முஸ்லிம உறுப்பினராவது தெரிவு செய்யப்படவில்லை-

இதனால் முஸ்லிமகள் தமது தம சமபந்தப்பட்ட தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாது திண்டாடி வந்தனர்-

இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி செலுத்த வேண்டும என பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது-

[இ—241]

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

1990 மார்ச் 22 —
சுடர் 18 கதிர் 4440

## கல்விப் பகுதி அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

ஆசிரியர்கள் ஒரு பகுதியிலுள்ள பாடசாலைகளிலிருந்து இன்னொரு பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம செய்யப்பட்டால் அவர்களுக்குச் சமபளம கிடைப்பது பெருமபாலும தடைப்பட்டு விடுகிறது.

காரணம என்ன?

ஆசிரியர்களின் சமபளப் பட்டியல்களை அந்தந்தப் பகுதிகளில் உள்ள கல்வி அலுவலகங்களே தயாரிக்கின்றன. சமபளப் பட்டியலைத் தயாரிப்பதற்கு ஆசிரியர்கள் சமபந்தப்பட்ட விவரக் கோவை இருக்க வேண்டும.

ஆசிரியர்களை இடமாற்றம செய்யும போது அவர்களின் விவரக் கோவைகளைச் சமபந்தப்பட்ட கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பக் கல்விப் பகுதி அதிகாரிகள் தவறி விடுகிறார்கள்.

ஒரு ஆசிரியரின் விவரக் கோவை எவ்வளவு காலம அனுப்பப்படாமல் இருக்கிறதோ அவ்வளவு காலமும அந்த ஆசிரியருக்குச் சமபளம கிடைக்காது.

கடந்த ஆறு மாத காலத்தில் சுமார் 15 ஆயிரம ஆசிரியர்கள் இடமாற்றம செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களில் பலருக்கு புதிய பாடசாலைகளில் இன்னும சமபளம கிடைக்கவில்லை.

இந்த விஷயம கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதை அடுத்த கல்வி அமைச்சு கல்விப் பகுதி அதிகாரிகளுக்குக் கடும எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

# மனித மேம்பாட்டு கல்வி சீரிய வாழ்வுக்கு துணை

## 6 முதல் 14 வயதுக்குள் போதிக்க

## பகவான் சாயி பாபா பணிப்பு

### சாயி அமிர்தம்

மனித மேம்பாட்டினைப் பிள்ளைகள் உணரும பொருட்டு பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா வகுத்துள்ள கல்வி நெறி நற்பயன் தரக் கூடியது.

மிக முக்கியத்துவம வாய்ந்த மனித மேமபாட்டுக் கல்வியை ஒரு பிள்ளையின் 6 வயது தொடக்கம 14 வயது வரை உள்ள கால கட்டத்தில் கற்பிப்பது இன்றியமையாதது!

இக்கால கட்டத்தில்தான் ஒரு பிள்ளையின் மூளை மிகத் துரிதமாக வளர்கின்றது. அத்துடன் தான் காணும எந்த விடயத்தையும நிகழ்ச்சிகளையும இலகுவில் கிரகித்து தன் உள்ளத்தில் பதிக்கும கால கட்டமாகவும திகழ்கின்றது.

எனவே இக் கால கட்டத்தில் ஒரு பிள்ளை எந்தச் சூழ்நிலையில் வளர்கின்றதோ அதுவே அப் பிள்ளையின் எதிர்காலம முழுவதையும நிர்ணயிக்கிறது எனலாம.

எனவே பெற்றோர் இக்கால கட்டத்தில் மிக மிகக் கவனம செலுத்த வேண்டும எனக் கல்வியியலாளர் கருதுகின்றனர்.

இக் கல்வித் திட்டம ஓர் நீண்ட காலத் திட்டமாகும். அதேசமயம சீரிய ஒரு சமுதாயத்தை உருவாக்கும திட்டமுமாகும். எனவே இக்கல்வித் திட்டம மூலம இன்று நாம விதைக்கும விதை சிறிது சிறிதாக வளர்ந்து அரும்பு விட்டு, குருத்து விட்டு, செடியாகி, பயிராகி, பாரிய விருட்சமாகும.

— நா. புவனேந்திரன் —

தன் நிழலில் சத்யம, தர்மம, சாந்தி, பிரேமை, அகிமசை எனும மனித மேமபாட்டுக்குணங்களை உருவாக்கி பாதுகாத்து எதிர்காலச் சமுதாயத்தையே தூய்மையானதாக வளர்த்தெடுக்கும.

இத்தகைய புனிதமான இக்கல்வித் திட்டத்தை சத்தியசாயி நிறுவனங்கள் விசேட வகுப்புகள் மூலம பாடசாலைகளுக்குப் புறமபாக கற்பித்து வந்தன.

இதன் பயன்பாடும தாக்கமும மாணவர்கள் மத்தியில் மிக மிக வலுவுடையதாக இருந்தன. இவ் வகுப்புகளில் பயிலும மாணவர்களுக்கும ஏனைய மாணவர்களுக்கும இடையில் பாரிய வேறுபாடுகளை பழக்க வழக்கத்திலைக் காண முடிந்தது.

இக் கல்வித் திட்டம படிப்படியாக பாடசாலைகளிலும புகுத்தப்பட வேண்டும என்ற வேண்டுகோள் பல நாடுகளிலும எழவே அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் தம பாடசாலைகளில் இக்கல்வித் திட்டத்தைப் புகுத்த முனைந்தன. எனவே இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும பாடசாலை பாடத் திட்டத்திலும சேர்த்துக் கொள்ளப்பட்ட திட்டமாக இத்திட்டம மாறி விட்டது.

சத்யம, தர்மம, சாந்தி, பிரேமை, அகிமசை என்ற இவ் உயர்ந்த ஐந்து மனித மேமபாடுகளையும எவ்வாறு சிறு வயதில் மாணவர்களுக்கு இலகுவில் கற்பிக்கலாம எனப் பலர் ஆச்சரியத்துடன் அங்கலாய்த்ததுண்டு!

ஆனால் இக் கல்வித் திட்டத்தை மாணவர்களுக்கு அவர்களது பிஞ்சு மனத்தில் மிக இலகுவாக பசுமரத்தாணி போல பதியத்தக்கதாக மிக நுணுக்கமாக பல பெரிய அறிஞர்களால் பகவானின் அறிவுறுத்தலின்படி இப் பாடத் திட்டம மிக அவதானமாக தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறிய சிறிய கதைகள் சொல்வதன் மூலம இப் புனிதமான மேமபாட்டுக் குணங்கள் மாணவர்களது இதயத்துள் இலகுவாகப் புகுத்தப்படுகின்றன.

மௌனமாக சிறிது நேரம கண்ணை மூடிக் கொண்டு இருக்கப் பழகுவதன் மூலம இறுதியில் அவர்கள் தியானம செய்வதற்கு வழி அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

மாணவர்களைக் கவரும அமசங்கள் மூலம அவர்களுக்கு கல்வியின் பாரச்சுமை தெரியாமலேயே விளையாட்டு விளையாட்டாக அதே சமயம உரிய விதிமுறைப்படி ஒழுங்கு முறை தவறாமல் விசேட பயிற்சி கொண்ட ஆசிரியர்கள் மூலம மிக அவதானமாக இப் பாடத்திட்டம மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது.

இன்று இந்தியாவில் எல்லா மாநிலங்களிலுமே இக் கல்வித் திட்டம பல ஆண்டுகளாக வெற்றிகரமாகக் கற்பிக்கப்பட்டு வருவது மட்டுமன்றி, சர்வதேச ரீதியாக இன்று சுமார் 66 நாடுகளில் இக் கல்வித் திட்டம பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிறுவனங்களால் மிக அக்கறையுடன் போதிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இக் கல்வித்திட்டம பற்றி பல அறிஞர்களால் பல கருத்தரங்குகளும அவ்வப்போது பல்வேறு நாடுகளிலும நடைபெற்று வருகின்றன.

[ம[

## ஆயுள்வேதவைத்தியருக்கு ரூ. 64 லட்சம் அதிஷ்டம்

கொழுமபு, மார்ச் 21

சனிக்கிழமை அதிஷ்டலாப சீட்டிழுப்பின் 64 லட்ச ரூபா பணப் பரிசு பிலிமத்தலாவையைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியர் ஒருவருக்கு கிடைத்திருக்கிறது.

சுமார் மூன்று வாரத்திற்கு முன்னர் இழுக்கப்பட்ட சீட்டிழுப்பிலேயே இவருக்கு இந்த அதிஷ்டம கிடைத்தது.

அடிக்கடி சனிக்கிழமை அதிஷ்டலாப சீட்டுகளை வாங்கும இவர் இதற்கு முன்னர் பல ஆறுதல் பரிசுகளை வென்றுள்ள

சபை தலைவரினால் அவரிடம கையளிக்கப்படும.

பிரஸ்தாப வைத்தியருக்கு பாடசாலை செல்லும இரு பிள்ளைகள் இருக்கிறார்கள.

(ண—ர)

## தொலைபேசி தொடர்பு சீராக இல்லை

குமபளை, மார்ச் 20

குமபளையை அடுத்துள்ள



## கொடியேற்றும் வைபவம்

## பாதை புனரமைப்பு

பலாங்கொடை மார்ச் 20

பலாங்கொடை தொரக்கஹமடையில் அமைந்துள்ள முஸ்லிம குடியேற்றத் திட்டத்துக்குச் செல்லும பிரதான பாதை சிறப்பாக புனரமைப்பு செய்யப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம மாகாண சபை உறுப்பினர்களுக்குக் கிடைக்கும நிதியிலிருந்து இந்தப் பாதை புனரமைப்பு செய்யப்படுகின்றது.

மிக விரைவில் இக்குடியேற்

## செய்தித் திரட்டு

### மின் விநியோகம்

பலஅக்குறனை மார்ச் 20

இரத்தோட்டை தொகுதியில் உள்ள வெரலுகம கிராமத்துக்கு கிராமிய மின் விநியோகத் திட்டத்தின் கீழ் மின்சாரம வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் எழுபத்தி ஐயாயிரம ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஐ—411)

### பரிசளிப்பு விழா

காலி, மார்ச் 20

ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் காலி மகவட்ட செயலகத்தின் அனுசரணையுடன் மாவட்ட ரீதியில் நடைபெற்ற மீலாதுன்னபி கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியோர்களுக்கான பரிசளிப்பு விழா — காலி — தலாபிட்டியா ஷெய்கு யூஸுப் ஸாஹிப் தர்கா முற்றவெளியில் எதிர் வரும மார்ச் 27 ஆம திகதி செவ்வாய் பிற்பகல் 3-30 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

முஸ்லிம காங்கிரஸ் காலி மாவட்டப் பிரதிநிதி அல்ஹாஜ் எம எஸ் எம ஹஸன், தலைமையில் நடைபெறவிருக்கும பிரஸ்தாப விழாவில் முஸ்லிம காங்கிரஸின் தேசியத் தலைவர் ஜனாப் எம எச் எம அஷ்ரப் (எம பி) காங்கிரஸ் பிரதித் தவிசாளர் ஜனாப்ஹிஸ்புல்லாஹ் (எம பி) ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

(ஐ—[illegible]4)

### நூல் நிலையம்

உடத்தலவின்ன, மார்ச் 20

அக்குறணையைச் சேர்ந்த கஸாவத்த முஸ்லிம வித்தியாலயத்திற்கென நூல் நிலையம ஒன்றை அமைப்பதற்காக மத்திய மாகாண சபையின் முஸ்லிம காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப் எஸ் ஏ எம உபைதுல்லா, சபைக்கென ஒதுக்கப்பட்ட வெவ்வாநட் நிதியிலிருந்து ஐமபதினாயிரம ரூபாவை வழங்கியுள்ளார்.

இவ்வித்தியாலயம ஆரமபிக்கப்பட்டு 17 வருடங்களாகியும இதுவரை காலமும நூல் நிலையம இல்லாமலே இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ—3348

தாரிகளுக்குக் கடும எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

இடமாற்றம செய்யப்படும ஆசிரியர்களின் விவரக் கோவையை ஒரு வார காலத்துள் சமபந்தப்பட்ட கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும. தவறினால் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும என்பதே அந்த எச்சரிக்கை ஆகும.

கல்வி அமைச்சு வெறும ஒழுங்கு நடவடிக்கையோடு நிறுத்தி விடாமல் தவறிழைக்கும அதிகாரிகளுக்குக் கடும தண்டனையும வழங்க வேண்டும.

ஆசிரியர்கள் பற்றாக் குறைச் சமபளம பெறுபவர்கள். பல ஆசிரியர்களுக்கு வேற வருமானம இல்லை. சேமிப்பும கிடையாது. பலர் கடன்பட்டு வாழ்க்கை நடத்துகிறார்கள்.

அ ப ப டிப்பட்டவர்களுக்கு மாதச் சமபளம ஒழுங்காகக் கிடைக்கவில்லையானால் அவர்கள் என்ன செய்வார்கள்?

இதை உணர்ந்து மனிதாபிமான அடிப்படையிலேயேனும தமது கடமையைச் சரிவர நிறைவேற்றத் தவறும அதிகாரிகளைத் தண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

டலாப சீட்டுகளை வாங்கும இவர் இதற்கு முன்னர் பல ஆறுதல் பரிசுகளை வென்றுள்ளார்.

இவருக்குரிய காசோலை விரைவில் அபிவிருத்தி லொத்தர்

## கவிதை, நூல் வெளியீட்டு விழா

கட்டுகஸ்தோட்டை— மார்ச் 20

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் வெளியீடான கலைஞன் முத்துசமபந்தரின் "பாட்டாளிக்குப் பரிசு" கவிதை நூல் வெளியீட்டு விழா கண்டி, "ரொச்டேல்" கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது,

இமமாதம 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும இவ்விழாவிற்கு மக்கள் கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளர் திரு எஸ் ஜீவராஜ் தலைமை வகிப்பார்.

பாட்டாளிக்குப் பரிசு நூல் வெளியீட்டுரையை திரு வேமபை ஸ்ரீமுருகன் (வீரகேசரி) நு'-த்துவார்,

விமர்சன உரையை குமரன் ஆசிரியர் திரு செ கணேசலிங்கன், திரு இரா அ இராமன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(ஐ-139)

கமபளை, மார்ச் 20

கமபலையை அடுத்துள்ள தொலைபேசிகள் சீராக இயங்குவதில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது—

வெளியூரில் இருந்து தொடர்பு கொண்டு இரண்டொரு வார்த்தைகள் பேசும போதே தடைப்பட்டுப் போகிறதாம—

ஆயினும அதற்கான கட்டணங்கள் பன்மடங்கு கூடுதலாக கணக்கிடப்பட்டு வருகிறதாம—

இதைக் குறித்து இப்பகுதி தொலைபேசி பாவனையாளர்கள் பலரும தாம செலுத்த வேண்டிய பாக்கி கட்டணங்களை இன்றும செலுத்தாமல் இருக்கிறார்களாம—

அறவிடப்பட்டுள்ள கட்டணத்தில் வித்தியாசம காரணமாகவே தாங்கள் கட்டணத்தைச் செலுத்தாமல் இருப்பதாகவும தெரிவிக்கப்படுகிறது— (எ—083)

## கொடியேற்றும் வைபவம்

கொழுமபு தெமட்ட மரத்தடி ஜு'மஆப் பள்ளி வாசலின் புதிய கொடிக் கமபத்தில் முதன் முதலாக கொடியேற்றும வைபவம அண்மையில் நடை பெற்றது.

முஸ்லிம மத கலாசார ராஜாங்க அமைச்சர் ஜனாப் ஜாபிர் ஏ காதர் கொடியேற்றுவதைப் படத்தில் காணலாம.

[படம— உபாலி ஜயரத்ன]

## ரமழான் நோன்பு ஆரம்ப திகதியை நிர்ணயிக்கமாநாடு

கொழுமபு, மார்ச் 21

புனித ரமழான் நோன்பு ஆரமபமாகும திகதியை நிர்ணயிப்பதற்காகக் கொழுமபு பெரிய பள்ளிவாசலில் எதிர்வரும 27 ஆம திகதி மாலை உலமாக்களின் விசேட மநாடு ஒன்று நடைபெறும.

ரமழான் தலைப்பிறையைக் காண்பவர்கள், தகுந்த ஆதாரங்களுடன் கொழுமபு பெரிய பள்ளி வாசலுக்கு அறிவிக்குமாறு கேட்கப்பட்டு உள்ளனர்.

(இ—007)

செய்யப்படுகின்றது.

மிக விரைவில் இக்குடியேற்றத் திட்டத்துக்கு நீர் வசதியும கிடைக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ—038)

## புனருத்தாரண வேலை ஆரம்பம்

இராகலை மார்ச் 20

சூரியகாந்தி ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலய புனருத்தாரண வேலைகள் ஆரமபமாகியுள்ளன.

சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கும புனருத்தாரணத்திற்கான நிதியை தோட்ட பொது மக்கள் வழங்கியுள்ளனர். (ஐ—265)

தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ—3348

## கைப்பணிப்பொருள் கண் காட்சி

அட்டன், மார்ச் 20

இ தொ காவின் பொன் விழா நடைபெறும அட்டன் டன்பார் மைதானத்தில் இமமாதம 24ஆம, 25ஆம திகதிகளில் விசேட கைப்பணி பொருட்களின் கணகாட்சி ஒஇறும நடைபெறும.

புடைவைக் கைத்தொழில் மற்றும கிராமிய சிறுகைத்தொழில் அமைச்சின் அனுசரணையுடன் இக்கண்காட்சி இடம பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மலையக இளைஞர் — யுவதிகள் மத்தியில் சுயதொழில் மற்றும சிறுகைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும நோக்கத்துடனேயே மேற்படி கண்காட்சி நடத்தப்படுகிறது.

(ஐ—096)

## 'விஞ்ஞான ஆய்வுகூடம்

அக்குறணை, மார்ச் 20

கண்டி மாவட்டத்தில் உள்ள செஙகடகலை, அறுப்பொல லேவல்ல வித்தியாலயத்தில் குறைந்த செலவில் அமைக்கப்பட்டு வரும விஞ்ஞான ஆய்வு கூடம முதலாவதாக அமைக்கப்பட உள்ளது

இந்த ஆய்வு கூடத்தை அமைப்பதற்கு எழுபத்தி ஐயாயிரம ரூபா செலவிடப்பட உள்ளது. இத்திட்டம கண்டி மாவட்டத்தில் உள்ள விஞ்ஞான ஆய்வு கூடம இல்லாத பாடசாலைகளுக்கு அமுல் செய்யப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ—411)

## ஆசிரியருக்குக் கடிதம்

கல்முனை வரை

# யாழ்ப்பாணம் —மட்டக்களப்பு பஸ் சேவை நீடிக்கப்படுமா?

யாழ்ப்பானத்தில் இருந்தும மட்டக்களப்பில் இருந்தும தற்போது இரண்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவைக்கு விடப்பட்டுள்ளன.

"விசேட சேவை" எனும் பெயரிலும, (இதற்கு இரட்டிப்பு மடங்கு பஸ் கட்டணம அறவிடப்படும) மற்றையது சாதாரண பஸ் (இதற்கு வழமையான கட்டணம) எனும பெயரிலும. இப் பஸ்கள் சேவைக்கு விடப்பட்டுள்ளன.

இந்த இரண்டு பஸ்களுக்கும முன் கூட்டியே ஆசனப் பதிவுகள் செய்யப்பட வேண்டும.

கல்முனை, சமமாந்துறை, காரைதீவு, அக்கரைபபற்று சாய்ந்தமருது போன்ற பகுதிகளிலுள்ளவர்கள் இந்த பஸ்களில் பிரயாணம செய்வதானால் 2 நாட்களை வீணாக்க வேண்டியுள்ளது.

அதிகாலையில் ஆசனஙகளைப் பதிவு செய்ய ஒரு நாள் முன் கூட்டியே மட்டக்களப்பு போக வேண்டும.

அடுத்தநாள் அந்த பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஒருநாள் முந்திச் சென்று மட்டக்களப்பில் தங்கி நிற்க வேண்டும,

இதனால் இப்பகுதிகளிலிருந்து யாழ செல்லும மக்கள் கடும கஷ்டமுறுகின்றனர். யாழ் இருந்து இப்பகுதிகளுக்கு வருவதானாலும ஒரே நாளில் வீடு வந்து சேர்வது கடினம,

அது மட்டுமில்லாத "சாதாரண பஸ்" எந்த நேரமும பழுதடையலாம எனும அபாயமும உண்டு. பிரயாணப் பொதிகளை வைப்பதற்குரிய வசதிகளும இப் பஸ்களில் செய்யப்படவில்லை.

தற்போது யாழ் செல்லும மக்கள் அதிகரித்து வருவதால் இந்த இரண்டு பஸ்களையும, கல்முனை வரை நீடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும.

அல்லது ஆசனப் பதிவுகளை "கல்முனைசாலை" வரைக்கும விஸ்தரிக்க வேண்டும.

அத்துடன் ஓரளவு நல்ல நிலையிலுள்ள பஸ்களையே சேவையில் விடவும வேண்டும.

இவ்வாறு பிரயாணிகள் சார்பில் தயவுடன் வேண்டுகிறேன்.

எச் எம எம றஸீட்,
சாய்ந்தமருது -5,

## புதிய கட்டிடம்

புஙகுடுதீவு, மார்ச் 20

புடுஙகுடுதீவு பாரதி சனசமூக நிலையத்திற்கெனப் புதிய கட்டிடம ஒன்று சுமார் ஐந்து லட்சம ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும.

இதற்கான நிதி யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் சிபார்சின் பேரில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டிட வேலைகளும தற்போது ஆரமபமாகியுள்ளது. (ஐ—240)

லித்துவேனியா மீதான

# ரஷ்ய அச்சுறுத்தலை தவிர்க்க எச்சரிக்கை

## அமெரிக்கா விடுத்தது

வாஷிங்டன், மார்ச் 21

**லித்துவேனியா மீதான ரஷ்ய அச்சுறுத்தல் தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறு அமெரிக்கா ரஷ்யாவை எச்சரிக்கை செய்திருக்கிறது.**

பால்டிக் குடியரசான லித்துவேனியா சுதந்திர பிரகடனம் செய்து கொண்டது தெரிந்ததே இந்தப் பிரகடனம் சட்டரீதியற்றது— செல்லுபடியற்றது எனக் கூறிய ரஷ்யா அந்த முடிவை லித்துவேனியா மாற்றிக் கொள்ள வேண்டுமெனப் பணித்தது—

ரஷ்ய மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என ரஷ்யா அறிவித்தது—

இதனையடுத்தே அமெரிக்கா ரஷ்யாவை எச்சரிக்கை செய்திருக்கிறது

இதுபற்றி வெள்ளை மாளிகை பேச்சாளர் மார்லின் பிட்ஸ் வாட்டர் தெரிவித்தார்—

லித்துவேனியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு சுமுகமான முறையில் செயல்பட வேண்டுமென்பதே எமது அவா பால்டிக் குடியரசு மக்கள் சுயநிர்ணயம் பெறுவதை அமெரிக்கா வரவேற்கின்றது— அமைதியான முறையில் கருமங்கள் அமைய வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றதென வெள்ளை மாளிகைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்—

லித்துவேனியாவின் பொருளாதாரம் மற்றும் ஏனைய விவகாரங்களில் ரஷ்யாவின் ஆலோசனையை தாம் நாட அவாக் கொண்டிருப்பதாக லித்துவேனியா சுதந்திர பிரகடனத்தின் பின் கூறியது—

இதனையும் அவர் நினைவு கூர்ந்தார்— (எ)

### வங்காளதேச தேர்தல் வன்முறை பலர் பலி

டாக்கா, மார்ச் 21

தென் வங்காளதேசத்தில் 426 கிராம மேயர்களின் தெரிவின் பொருட்டு நடத்தப்பட்ட தேர்தல்களையடுத்து வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன— புதிதாக ஆரம்பமான இந்த வன்முறைகளில் 6பேர் பலியாகினர்—

300க்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர்—

இதுவரை 2000க்கு மதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்—

கடந்த 14 ஆம் திகதி தேர்தல்கள் ஆரம்பமாகின— ஆங்காங்கே நடந்த சம்பவங்களில் 14 பேர் உயிரிழந்தனர்— (எ)

### காஷ்மீர் மக்களுக்கு இந்தியா அளித்த உறுதிக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்

—பெனாஸிர்

லாகூர், மார்ச்— 21

காஷ்மீர் மக்களுக்கு இந்தியா அளித்த உறுதிக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும்—

இவ்வாறு கூறினார் பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ—

இந்திய முஸ்லிம்களின் வலியுறுத்தலின் பேரில் பாகிஸ்தான் சுதந்திர முஸ்லிம் நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாவதையொட்டிய வைபவம் நேற்று லாகூரில் இடம்பெற்றது

அங்கு பெருந்திரளானோர் குழுமியிருந்தனர்— அவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே பெனாஸிர் மேற்கண்டவாறு கூறினார்—

அவர் தொடர்ந்து கூறியதாவது—

காஷ்மீரிகளை அடக்கி ஒடுக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஒரு போதும் பலனளிக்கப் போவதில்லை—

காஷ்மீரில் சிந்தப்படும் ஒவ்வொரு துளி இரத்தமும் சுதந்திர தாகத்தையே தெளிவுபடுத்துகின்றன. அவை புதிய போராளிகளை உருவாக்கிய வண்ணமே உள்ளன—

இவ்வாறு பெனாஸிர் கூறினார்—

### உடைந்து விழுந்த பாகங்கள் எரிந்து சாம்பர்

வாஷிங்டன், மார்ச்— 21

விண்வெளிக்கு ஏவப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் அமெரிக்க உளவு செய்மதியொன்றின் இரண்டு உடைந்த பாகங்கள் எரிந்து சாம்பராகி யதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது (மண்ணின் பரிவட்டத்தை நெருங்கும்போது அவை எரிந்து சாம்பராகியதாகத் தெரிய வருகிறது—

உடைந்த எஞ்சிய பாகங்களும் செய்மதி பகுதியும் ஒரு சில தினங்களுக்கு முன்னர் எரிந்துவிடுமெனக் கருதப்படுகிறது—

இராணுவ உளவு செய்மதியின் விண்வெளிக்கு ஏவப்பட்டு மூன்று வாரங்களின் பின் பெருக்கத்தை இழந்துவிட்டது... அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது— (எ)

## இஸ்ரவேலில் புதிய அரசாங்கம் அமைக்க பெரெஸுக்கு உத்தரவு

ஜெருஸலம், மார்ச்— 21

இஸ்ரவேல் தொழிற் கட்சித் தலைவர் சிமோன் பெரெஸுக்கு புதிய அரசாங்கத்தை அமைக்க செவ்வாயன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது—

இஸ்ரவேல் ஜனாதிபதி சயிம் ஹெர் சோக் செவ்வாய்க்கிழமை இவ் உத்தரவைப் பிறப்பித்தார்

